---

**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2014**

---

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசோட்டக்கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து பதிவுசெய்தல் அதிகாரச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட கட்டளைகளின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-----------------------

### 2.1 அபிப்பிராயம்

--------------------

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

---------------------

### 3.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 5,284,088 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 4,054,626 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,229,462 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது உரித்து பதிவுசெய்தல் வருமானமானது ரூபா 1,051,652

ஆலும், முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 177,423 ஆலும் உயர்ந்திருந்தமை அதிகரிப்புக்கு முக்கியமான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 நிதியத்தின் செயற்படு தன்மை

(அ) 1998 இன் 21 ஆம் இலக்க உரித்து பதிவுசெய்தல் அதிகாரச் சட்டத்தின் படி காணி பதிவுசெய்யும் போது ஏற்படும் நட்டத்திற்காக நட்டவீடு செலுத்துவதற்கு இந்த நிதியம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுகின்றதாயினும், பொது மக்களுக்கு இதனைப் பற்றிய அறிவு இன்மையால் மீளாய்வாண்டுவரை எவ்வித நட்டவீடும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய காலத்தின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறாமையால் பதிவுக் கட்டண வருமானத்தின் 40 சதவீதம் மாதாந்தம் நிதியத்திற்கு மாற்றப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மட்டுமே நடைபெற்றிருந்தன. அந்த நடவடிக்கைகள் தொடர்பாக 6 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டமையால் அவர்களது ஊதியம் மற்றும் முகாமைத்துவக் குழுப் படிகள் வழங்கும் வேலைகள் மட்டுமே நடைபெற்றிருந்தன. நிதியத்தின் மட்டுப்படுத்தப்பட்ட கடமைகளை வேறு வேலைகள் போன்று கடமை கையளிப்பு செய்வதன் மூலம் நிறைவேற்றிக்கொள்ள இயலுமா எனப் பார்க்காது பிரதம கணக்காளர் உள்ளிட்ட 6 பேருக்கு அடிப்படைச் சம்பளத்தின் $^1/_6$ பங்கு அடிப்படையில் மேற்படி கடமை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்தப்படுதல் பலனற்றது என வெளிப்படுத்தப்படுகின்றது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட தொகைக்கும், உள்ளபடியான தொகைக்குமிடையே 14 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஒரு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.